## தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 2017

---

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 17 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிதியத்தின் தலைவருக்கு 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(அ) நியமத்தின் 31 (அ) பந்தியின் பிரகாரம் சொத்தொன்றாக இனங்காணப்பட்டதன் பின்னர் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்கள் அதன் நியாயப் பெறுமதி நம்பகமான முறையில் அளவிடக்கூடிய போது அதன் மீள் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு 3 அல்லது 5 வருடங்களுக்கு ஒரு தடவை உருப்படிகள் மீள் மதிப்பீடு செய்தல் போதுமானவையென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 39,470,895 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான அப் பயன்பாட்டு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 3,432,638 தொகையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

**(ii) இலங்கை கணக்கீட்டு நியமம் 21**

நியமத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு பிரயோக பணத்திலான நிதி உருப்படி ஏற்படும் போது கொடுக்கல் வாங்கல் திகதி மற்றும் தீர்ப்பனவு செய்யும் திகதி ஆகியவற்றுக்கிடையே செலாவணி மாற்று வேறுபாடொன்று ஏற்படுவதுடன், கொடுக்கல் வாங்கல் அது இடம்பெற்ற காலப்பகுதியிலேயே இனங்காணப்படும். எவ்வாறெனினும், கொடுக்கல் வாங்கலொன்று/ ஏதேனும் பெறுமதியொன்று அதற்கு

அடுத்த கணக்கீட்டு காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் எனின், அது தீர்க்கபடும் காலப்பகுதியினுள் செலாவணி மாற்று வீதங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படாமையின் காரணத்தால் 2017 ஆம் ஆண்டிற்கான செலாவணி மாற்று வீதத்திலான வேறுபாடுகளின் காரணமாக கணக்குகளினுள் இலாபமானது ரூபா 994,384 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதியத்தின் முதலீட்டு வருமானங்களின் மொத்த பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், தேறிய வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தமையின் காரணத்தால் நிதிக்கூற்றுக்களின் முதலீட்டு வருமானம் ரூபா 123,111,800 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தவணை வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், பற்றுச்சீட்டுகளை வழங்குவதிலான தாமதத்தின் காரணமாக 2017 ஆம் ஆண்டிற்கு உரியதாக ரூபா 17,568,213 கூட்டுத்தொகையான தவணைப் பணங்கள் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிராததுடன், அதற்கு பதிலாக அந்த பெறுமதி “Morot Premium Advance Collected” கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iii) பெற வேண்டிய தவணை வருமானத்தினுள் 90 நாட்களை கடந்த ரூபா 95,978,933 கூட்டுத்தொகையான மீதிகள் மற்றும் பெற வேண்டிய தவணை வருமானம் - மறு காப்புறுதியினுள் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 9,053,364 ஆன இனங்காணப்படத மீதிகள் தொடர்பில் மீளாய்வு செய்து ஐயக்கடன் மற்றும் அறவிட முடியாக்கடன்களுக்கான ஒதுக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மாவட்ட அலுவலகங்களின் நாளாந்த பண வைப்பு திகதிகள் மற்றும் கட்டமைப்பிற்கு உட்படுத்தி பெற்றுக்கொள்ளப்படும் உறுதிச்சீட்டுகளில் உள்ள திகதிகள் ஆகியவற்றுக்கிடையே கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான இடைவெளி காணப்படுகின்றமையால் வங்கிக் கணக்குகளில் பணம் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணம் அந்த திகதிகளில் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டதற்கிணங்க ரூபா 5,482,729 ஆன வருமானம் மீளாய்வாண்டில் உரிய கணக்குகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) வெள்நாட்டு பிரயோக பணத்திலான நிதி உருப்படிகள் ஒவ்வொரு அறிக்கை காலப்பகுதியின் இறுதியிலும் வீதங்களை பயன்படுத்தி பரிவர்த்தனைக்குட்படுத்தப்பட வேண்டும். எனினும், அவ்வாறு பரிவர்த்தனைக்கு உட்படுத்தப்படாமையினால் நிதியத்தின் இறுதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,918,344 ஆன தேறிய இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

| **உருப்படி** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| மறு காப்புறுதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தவணை வருமான கணக்க மீதி மாற்றப்படாமை. | 5,884,934 |
| SRCC பிரிவின் அமெரிக்க டொலர் நடைமுறைக் கணக்கின் மீதிகளின் சீராக்க வேறுபாடு. | 622,682 |

| | |
|---|---|
| அந்நிய செலாவணி மாற்றத்தின் போது ரூபா 262,796 ஆன நட்டம் டுபா 371,872 ஆன இலாபமாக காண்பிக்கப்பட்டிருந்தமை. | (589,272) |
| | ---------------- |
| | **5,918,344** |

(vi) வெள்நாட்டு பிரயோக பணத்திலான நிதி உருப்படிகள் கணக்கின் காலப்பகுதியொன்றின் இறுதியில் இறுதி வீதங்களை அடிப்படையாக கொண்டு பரிமாற்றப்பட வேண்டும். எனினும், அவ்வாறு பரிவர்த்தனைக்கு உட்படுத்தப்படாமையின் காரணத்தால் பெற வேண்டிய மோட்டார் அல்லாத தவணை வருமான மீதியில் ரூபா 56,614 ஆன நட்டமானது இறுதி நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியிலான சாதாரண காப்புறுதி - (மோட்டார் அல்லாத) கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வினுள் ரூபா 278,024 கூட்டுத்தொகையான செலவு மீதிகள் காணப்பட்டதுடன், இந்த மீதிகள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் SRCC மற்றும் NITF ஆகிய இரு பிரிவுகளை கொண்டுள்ளதுடன், அதன் போது ரூபா 3,462,112 கூட்டுத்தொகையான ஏனைய நிதியல்லாத சொத்துக்களினுள் உள்ளடங்கியுள்ள பெற வேண்டிய மீதிகள் நதியத்தன் NITF பிரிவு, SRCC பிரிவு ஆகியவற்றிலிருந்து இடர் கடன் வழங்குவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதியாவதுடன், அது ஜேவுகு பிரிவினால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிராததுடன், அது தொடர்ச்சியாக NITF பிரிவின் கணக்குகளில் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே SRCC பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய மீதியொன்றாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அந்த பெறுமதிக்குரிய சான்றுகளும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வு கட்டணம் ரூபா 886,200 ஆக இருந்ததுடன் அந்த தொகை அடிப்படையாக கொண்டு அல்லது 2017 ஆம் ஆண்டிற்கு கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கமொன்று மற்றும் ஆண்டிற்குரிய செலவினங்கள் கணக்கு வைக்கப்படாமையின் காரணத்தினால் செலவினங்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(x) நிதியத்தின் ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதியினை நடைமுறைப்படுத்தி இருந்ததுடன் அதன் மூலம் நிதியத்தின் ஊழியர்களுக்கு நட்டஈடாக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 9,813,773 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் அதற்குரிய தவணைகளின் பெறுமதியான ரூபா 3,331,750 தொகையில் 2017 ஆம் ஆண்டினுள் ரூபா 2,269,500 மாத்திரம் கிடைத்திருந்ததுடன் மிகுதி பணமான ரூபா 1,062,250 தொகையான தவணைகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்களமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சாதாரண காப்புறுதி மோட்டார் அல்லாத பிரிவிற்குரிய மாதிரகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றிற்கு அனுப்பிய மீதி உறுதிப்படுத்தல் அழைப்பு கடிதங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதிகள் மற்றும் காலப்பகுப்பாய்வுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறவேண்டிய மீதிகளுக்கிடையே ரூபா 472,880 ஆன வேறுபாடு நிலவியது.

(ii) நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் திறைசேரியின் பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 888,946,713 ஆக இருந்த போதிலும், மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் அது ரூபா 889,407,219 ஆக இருந்தமையினால் ரூபா 539,494 ஆன வேறுபாடொன்று நிலவியது. இந்த வேறுபாட்டிற்கான காரணமாக அமைந்த முதிர்வடைந்த அபிவிருத்தி பிணை முறிகளின் மீதியொன்று தொடர்ந்தும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

| | உருப்படி | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய தவணை வருமானம் - மறு காப்புறுதி | 9,053,364 | விரிவான பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள். |
| | | 101,030,311 | மீதி உறுதிப்படுத்தல்கள். |
| (ஆ) | பெற வேண்டிய தவணை வருமானம் - மோட்டார் | 1,136,176 | காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள். |
| (இ) | செலுத்திய வைப்புக்கள் | 270,049 | மீதி உறுதிப்படுத்தல்கள், விரிவான பட்டோலைகள். |
| (ஈ) | பெற வேண்டிய காசோலைகளை திருப்பி அனுப்புதல். | 585,481 | விரிவான பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள் |
| | | 112,075,381 | |

### 2.2.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிநிலைமக் கூற்றில் குறித்த இலக்கம் 10.1 பிரகாரம் 2016/17 ஆண்டிற்காக மறுகாப்புறுதி நிறுவனத்தினால் பெறவேண்டிய பெறுமதியிலிருந்து ரூபா 4,574,100,921 ஆக இருந்ததுடன் அந்த மீதி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்த நிதி நிலைமையில் 25 சதவீதம் ஆகும். 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அந்த மீதி ரூபா 954,701,937 இனால் அதாவது 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் அறவிட வேண்டிய மீள் காப்புறுதி பின்வருமாறாகும்.

| | பெறுமதி<br>ரூபா |
|---|---|
| பெற வேண்டிய மறு காப்புறுதி –RETRO | 2,157,672,249 |
| பெற வேண்டிய மறு காப்புறுதி –NNDIS | 2,416,428,672 |
| | 4,574,100,921 |

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) மீள் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய மேற்படி மீதிகள் கணக்காய்வுத் திகதியான 2019 சனவரி 17 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,590,250,491 கூட்டுத்தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,679,464,649 தொகை ஆண்டினுள் பதிவழிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் 490,479,162 பதிவழித்தமை தொடர்பில் மாத்திரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், ரூபா 1,188,985,487 தொகையினை பதிவழித்தல் தொடர்பில் முறையான அங்கீகாரமொன்று 2019 யூலை 02 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எவ்வாறெனினும் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதிய NITF/FIN/02/2016 இலக்கமுடைய முகாமைத்துவ கட்டளைக் கடிதத்தின் பிரகாரம் மேற்படி அறவிடப்பட வேண்டிய பெறுமதியில் ரூபா 3,117,190,041 தொகை அறவிட முடியும் என கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும், 2019 சனவரி 19 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் 51 சதவீதம் அல்லது ரூபா 1,590,250,491 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) அக்ரஹார காப்புறுதி அங்கத்தவர்களின் தகவல்களினை உள்ளடக்கும் முறையான தரவு கட்டமைப்பொன்று (Data base) பராமரிக்கப்பட்டிராமை மற்றும் உரித்துக்களை தீர்க்கும் நடைமுறையில் காணப்படும் நலிவுகளின் காரணமாக 2018 யூலை 25 ஆந் திகதி வரையிலும் 2015 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் மறுக்கப்பட்ட உரித்துக்களின் கொடுப்பனவாக கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 12,263,329 ஆன மீதியினை தீர்ப்பனவு செய்திருக்கவில்லை.

(iii) 2007 ஆம் ஆண்டு முதல் SRCC பிரிவிற்கு உரிய, ரூபா 3,843,488 தொகையான மீள செலுத்த வேண்டிய தவணைப்பணங்களின் மீதியொன்று காணப்பட்டதுடன் இந்த செலுத்த வேண்டிய தவணைப்பணத்தினை உரிய காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்தி தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக SRCC பிரிவிலிருந்து NITF பிரிவிற்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 2,907,894 தொகை மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) சாதாரண காப்புறுதி, மோட்டார் அல்லாத பிரிவின் கீழ் பெறவேண்டிய தவணைகளின் வருமானத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிலிருந்து மற்றும் அதற்குரிய திணைக்கங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக ரூபா 184,055 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வின் போது பெற்றுக்கொண்ட உறுப்படுத்தல்களின் பிரகாரம் அவ்வாறான அறவிடப்பட வேண்டிய மீதியொன்று காணப்படவில்லை.

(vi) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 323,711,536 தொகையான பெறவேண்டிய மோட்டார் அல்லாத சாதாரண காப்புறுதிகளின் தவணை வருமானத்தினுள் 90 நாட்களைக் கடந்த மீதி ரூபா 95,978,993 தொகையாக இருந்ததுடன் அதனுள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்படும் மீதிகளும் காணப்பட்டன. இந்த மீதிகளை அறவிடுதல் தொடர்பில் இதுவரையிலும் நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை** | |
| (i) | 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதிகள் அது வழங்கப்பட்ட பணி நிறைவடைந்ததுடன் உடனடியாக மீள தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 1,055,115 தொகையான உப கட்டுநிதிகளை தீர்ப்பதற்காக 2 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 396 | செலுத்துவதற்குள்ள அனைத்து காசோலைகளையும் செல்லுபடியான காலம் நிறைவடைந்ததுடன் மீள செல்லுபடியாக்குவதற்காக திருப்பி அனுப்புமாறு கோரி ஆகக்கூடிய விரைவில் பெறுநருக்கு அறிவிக்க வேண்டியதுடன் பெறுநரால் வழங்குனர் மீள அனுப்பப்பட்டால் அதனை மீள செல்லுபடியாக்கி தாமதமின்றி அனுப்ப வேண்டும். நிதியத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்த காசோலையொன்று தொடர்பில் நிதியம் அவ்வாறான நடைமுறையொன்றினை பின்பற்றியிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 396 (ஈ) | வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 6,860,412 கூட்டுத்தொகையான காசோலைகளுக்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைளடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 07/2015 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் விழா முற்பணங்களாக வழங்கக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 10,000 ஆன போதிலும் நிதியத்தினால் அந்த எல்லையினை கருத்தில் கொள்ளாது பதவியணியின் அடிப்படை சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு விழா முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 142 ஊழியர்களுக்கு அந்த எல்லையினை விஞ்சி ரூபா 1,871,081 தொகை முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. |

(இ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 113 ஆம் பிரிவு

ஏதேனும் மதிப்பீட்டு ஆண்டொன்றிற்காக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் முறையாக அந்த மதிப்பீடு ஆண்டின் ஆகஸ்ட், நவம்பர் மற்றும் பெப்ரவரி மாதங்களின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் அதற்கடுத்த ஆண்டின் மே மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் 4 பகுதிகளாக வருமான வரி செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் நிதியத்தின் சுய மதிப்பீடு அடிப்படையில் வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

---

(i) 8.3.8 ஆம் பிரிவு

நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ரூபா 2,170,000 கூட்டுத்தொனையான அனுசரணை வழங்கப்பட்டிருந்தது.

(ii) 9.14 ஆம் பந்தி

சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்வாக கைநூலில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிலை முறைப் படுத்தும் சட்டத்தின் 49 ஆம் பிரிவு

உருவாக்கப்பட்ட பிரமாணங்களின் மூலம் நிர்ணயிக்கப்படும் ஏதேனும் தகவல் உள்ளடக்கிய மும்மாத அறிக்கையொன்று ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் 45 நாட்களினுள் இலங்கை காப்புறுதி கண்காணிப்பு ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் காலாண்டு அறிக்கைகள் அந்த காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்படவில்லையென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களுக்காக வெளிநாட்டு பிரயோக நாணயத்தில் அரச வங்கியொன்று பேணப்பட்டிருந்த கணக்கொன்றின் மூலம் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகியோருக்கு நட்டஈடு செலுத்துவதற்காக காசு முறையொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த கணக்கின் பணத்தினை நட்டஈட்டினை செலுத்துவதற்காக பயன்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்த கணக்கில் கணக்கு தற்போது பயன்படுத்தப்படாமையினால் அவ்வாறு ஈடுபடுத்தியமையின் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) இலங்கை காப்புறுதிகள் கண்காணிப்பு ஆணைக்குழுவின் 2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் IBSL/DG/SUT/17/06/233 உடைய அறிவுறுத்தல் கோவையின் பிரகாரம் பிரிவுகளுக்கு இடையே நிதியத்தினை மாற்றல் செய்ய கூடாதபோதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது நிதியத்தின் பிரிவுகளுக்கிடையே பணம் மாற்றல் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மறு காப்பீட்டு பிரிவினால் ஏனைய பிரிவுகளுக்கு 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,651,072,897 ஆன தொகை தீர்ப்பனவு செய்ய வேண்டியதாக காணப்பட்டது.

## 2.5 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் 25 ஆம் பிரிவின் பிரகாரம் வரி விதிக்கக்கூடிய வருமானத்தை நிச்சயிக்கும் போது இடமளிக்ககூடிய கழிப்பனவுகளில் குறிப்பிடப்பட்டிருந்த (அ) பந்திக்கு இணங்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கு பதிலாக நிதியம் அரச துறை நிறுவனமொன்றானமையால் வரி செலுத்துதல் மற்றும் கணிப்பீடு செய்தல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் போது ஆரம்ப வருடங்களுக்காக அதாவது 2009 ஆம் ஆண்டு முதல் பெறுமானத்தேய்விற்கான கொடுப்பனவுகளுக்காக கணக்கீட்டு பெறுமானத்தேய்வு பெறுமதி வருமானத்திலிருந்து குறைப்பதற்கு இணங்கியதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் அந்த பதிலை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு உரிய எழுத்துமூல சான்றுப்படுத்தலொன்று இதுவரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 - நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பிக்கும் போது நியமத்தின் 114 ஆம் பந்தியின் இ பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் துணை தகவல்கள் பதிவுகளின்மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் இலங்கை கணக்கீட்டு நியம இல 12 இல்வருமான வரி பிரகாரம் வருமான வரி கணிப்பிடுதல் தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் நிதியத்தின் வருமான வரி பொறுப்புக்களினை பதிவுகளின்மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சாதாரண காப்புறுதி மோட்டார் அல்லாத தேறிய பொறுப்புக்களின்கொடுப்பனவுகளுக்குரிய உரிய பெறுமதியான ரூபா 185,529,964 தொகை 2017 ஆம் ஆண்டின் வரி பொறுப்புக்களின் கணிப்பீட்டின் போது ரூபா 185,631,974 என ரூபா 102,010 இனால் கூடுதலாக இனங்காணப்பட்டிருந்தமையின் காரணத்தினால் உள்ளவாறான வரி பொறுப்புக்கள் மற்றும் ஆண்டிற்கான வருமான வரி செலவினம் ரூபா 28,563 இனால் குறைத்துக் நிதிக்கூற்றுக்களினுள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வரி பொறுப்புக்களினை கணிப்பீடு செய்வதற்காக இலாபம் மற்றும் வருமானம் ஆகியவற்றினை கணிப்பீடு செய்யும் போது வியாபார விளம்பர செலவினத்தில் 25 சதவீதத்திற்காக இடமளிக்கப்பட கூடாது என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஏனைய செயற்பாட்டு மற்றும் நிர்வாக செலவினங்களினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,980,192 தொகையான வர்த்தக விளம்பர செலவினங்களின் பெறுமதி வரி பொறுப்பின் கணிப்பீட்டின் போது ரூபா 2,905,750 ஆக கருதி அவற்றுள் 25 சதவீதமான ரூபா 726,437 மாத்திரம் இடமளிக்கப்படாத செலவினமாக (Disallowable Expenses) வருமானத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 3,980,192

பெறுமதியான 25 சதவீதமான ரூபா 995,048 தொகை மற்றும் ரூபா 726,43 ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு ரூபா 268,688 ஆனமையால் 2017 ஆம் ஆண்டின் வரிப் பொறுப்புக்கள் மற்றும் வரி செலவினங்கள் ரூபா 75,211 இனால் குறைத்துக் நிதிக்கூற்றுக்களினுள் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

---------------------------

### 3.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 976,233,935ஆன தேறிய இலாபமாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம்ரூபா 2,839,751,855 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,863,517,920 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. மொத்தத் தவணைப் பண வருமானம் ரூபா 2,763,322,531 ஆல் அதிகரித்த போதிலும், தேறிய நலன்கள் மற்றும் நட்டஈடு செலவினம்ரூபா 4,357,544,669 தொகையினால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் வீழ்ச்சிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆண்டின் போது ரூபா 4,240,847,242 தொகையான மிகை 2014 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறான ரூபா 4,737,846,670 வரை அதிகரித்திருந்த போதிலும் 2018 மற்றும் 2017 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் அது வீழ்ச்சியடைந்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது அது தொடர்ந்தும் ரூபா 976,233,935 வரை அதாவது ரூபா 1,863,517,920 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறெனினும் நிதிப்பெறுபேறுக்கு ஊழியர் வேதனங்கள், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றினை மீள சீராக்கும் போது 20103 ஆம் ஆண்டின் போது ரூபா 4,326,939,182 தொகையான நிதியத்தின் பங்களிப்பு அதன் பின்னரான வருடங்களில் வருடாந்தம் தளம்பல் அடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 1,825,935,618 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------

### 4.1 செயலாற்றல்

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (எ) பிரிவின்1995 இன் 30 ஆம் இலக்க இலங்கை சமூர்த்தி அதிகாரசபை சட்டத்திற்கு இணங்க சமூர்த்தி நலன்பெறுவோர் மற்றும் அவர்களின் குடும்பங்கத்தவர்களுக்காக மற்றும் (ஏ) பிரிவின் பிரகாரம் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடும் நபர்களுக்காக காப்பீட்டினை வழங்குதல் இந்த அதிகாரச்சட்டத்தினுள் உள்ளடங்குகின்ற போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது அந்த காப்பீட்டு முறைமை நடைமுறைப்படுத்தி பங்களிப்பு தொகையினை (Premium) அறவிட நிதியம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(ii) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவினாலும் நடைமுறைப்படுத்த வேண்டிய பின்வரும் பணிகள் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்படாமை / போதியளவில் நடைமுறைப்படுத்தாமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| செயல்நடவடிக்கை திட்டத்திற்கான தொடர்பு | பிரிவு | விபரம் |
|---|---|---|
| 01 | மீள் காப்புறுதி | 2017 ஆம் ஆண்டின் போது மோட்டார் மற்றும் மோட்டார் இல்லாத சாதாரண காப்புறுதிகளுக்காக மறு காப்புறுதி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணியின் ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அது 2018 நவம்பர் 05 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்வதற்கு நிதியம் தவறியிருந்தது. |
| 02 | பணிப் பகிஷ்கரிப்பு, கலவரம், மக்கள் போராட்டங்கள் மற்றும் தீவிரவாத நிதியம் | கைமுறை (Manual) கணக்கீட்டு முறையில் கணக்குகளை பேணிச்செல்லல் இந்த பேணிச் செல்லும் இந்த நிதியத்தின் கணக்குகளை தண்ணியக்கப்படுத்தி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 03 | சாதாரண காப்புறுதி – மோட்டார் அல்லாத பிரிவு | i. நிலவும் காப்பீட்டு முறைமையை பரவலாக்குதல் மூலம் ஒருங்கிணைந்த வெளிநாட்டு காப்பீடொன்றினை பெற்றுக்கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டினுள் இந்த பிரிவினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு வசதிகளை வழங்குவோரின் மற்றும் மறு காப்புறுதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதில் உள்ள இயலாமையின் அடிப்படையில் அந்த பணி நிறைவு செய்வதற்கு நிதியம் தவறியிருந்தது.<br><br>ii. காப்புறுதி செய்யப்படாத அரச ஆதனங்களை காப்புறுதி செய்வதற்கு மும்மொழியப்பட்ட போதிலும் அந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டமைக்கான சான்றுகள் முன்வைக்கப்படவில்லை.<br><br>iii. மீனவர் படகுகளுக்கான காப்பீடு 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக நிதியத்தினால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 04 | சாதாரண காப்புறுதி – மோட்டார் பிரிவு | தனியார் துறையின் மோட்டார் வாகன காப்புறுதி மூலம் வருமானத்தினை அதிகரித்துக் கொள்ளுதல், புதிய காப்பீட்டு முறையொன்றாக அரச உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட மோட்டார் வாகனங்களை காப்பீடு செய்தல் “அக்ரஹார மோட்டார்” ஆக அறிமுகம் செய்தல், நுகர்வோர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் நுகர்வோரை தக்கவைத்துக் கொள்ளுதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதன் மூலம் கிளை அலுவலகங்களின் ஊடாக உத்தேச நடைமுறைகளை பெற்றுக்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் அந்த பணிகள் நிறைவேறுதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. |
| 05 | இயற்கை அனர்த்தங்கள் பிரிவு | காப்புறுதி கைத்தொழில்களுக்காக இயற்கையான இட கூட்டு (Disaster Pool) வடிவமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கான தகவல் அறிக்கையொன்றினை வழங்குவதற்கும் அந்த ஒழுங்கமைப்பிலிருந்து கிடைக்கும் நலன்கள் தொடர்பில் காப்புறுதி கைத்தொழிலை அறிவூட்டுதல் ஆகியன அதனுள் உள்ளடங்கும். எவ்வாறெனினும் 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் இதற்குரியதாக எந்த பணிகளும்நிறைவு செய்யப்பட்டிராததுடன் இலங்கை காப்புறுதி சங்கத்தின் இணக்கப்பாடு கிடைக்காமையினால் அதனை நடைமுறைப்படுத்த முடியாதென நிதியத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| 06 | விவசாயக் காப்புறுதி மற்றும் நுண் காப்பீட்டு பிரிவு | i. நுண் காப்புறுதியின் மூலம் புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கும் கால்நடை வளங்கள் மற்றும்விவசாயிகளுக்கும் உள்ளடங்கும் வகையில் காப்பீடொன்றினை அறிமுகம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விவசாயிகளுக்கான கடன் சுமையினால் ஏற்படும் நட்டங்களிலிருந்து பாதுகாப்பதற்கான விவசாய கடன் காப்பீட்டினை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் அந்த பணி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>ii. கொவி திவி அருண காப்பீட்டின் மூலம் ரூபா 1,200 ஆன வருடாந்த தவணையினை செலுத்தும் அடிப்படையில் 200,000 விவசாயிகளை காப்பீடு செய்வதன் மூலம் ரூபா 240,000,000 ஆன வருடாந்த தவணை வருமானத்தினை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், விவசாயிகளை காப்பீடு செய்வதற்கோ |

| | | |
|---|---|---|
| | | எவ்வித தவணை வருமானத்தினை உழைப்பதற்கோ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் அதற்குரியதாக 192,780 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| 07 | தகவல் தொழில்நுட்ப பிரிவு | நிலவும் தகவல் கட்டமைப்பின் குறைப்பாடுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களை சரியான முறையில் தயாரித்திருக்கவில்லை என்பது பலவருடங்களாக கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்ததுடன் புதிய தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பின் தேவைப்பாட்டினை இனங்கண்டு புதிய கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக மதியுரை பணியினை மேற்கொள்வதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அதற்கு உரியதாக மேலதிக நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. |
| 08 | நிதிப் பிரிவு | மறு காப்புறுதி மற்றும் சாதாரண காப்புறுதியாக நிதியத்திற்கான ஒதுக்கீடு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த பணி இதுவரையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்த முடியாதென நிதியம் அறிவித்துள்ளது. |
| 09 | | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இந்த பிரிவினால் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>i. முதலீடுகள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br><br>ii. முதலீட்டு நலன்களை அதிகரிப்பதற்கு தனியார் துறையினால் அரச வைப்புப் பத்திரங்களில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுத்தல்.<br><br>iii. மருத்துவமனைகளின் பங்குகளை முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டினை பலப்படுத்தல்.<br><br>iv. முதலீட்டுச் சந்தை தொடர்பிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| 10 | அக்ரஹார பிரிவு | (i) | 2005 மே 18 ஆந் திகதிய 12/2005(i) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் (ii) மற்றும் (iii) பிரிவுகளின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் அக்ரஹார காப்புறுதிக்காக கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தகவலின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முப்படைகள் நீங்கலாக அனைத்து அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1,119,441 ஆன போதிலும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் இந்த உத்தேச முறைமையின் கீழ் பதிவு செய்துள்ள மொத்த அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 696,501 மாத்திரமாகும். அதன் பிரகாரம் அக்ரஹார காப்பீட்டு உத்தேச முறைமைக்கு தற்போது 12 ஆண்டுகள் கடந்த அரச உத்தியோகத்தர்களின் சுமார் 38 சதவீதமானோரை அக்ரஹார காப்புறுதி உத்தேச முறைமையின் கீழ் பதிவு செய்வதற்கு நிதியம் தவறியிருந்தது. |
| | | (ii) | அங்கத்தவர்களுக்காக தனித்தனியான அங்கத்தவர்கணக்குகளை பேணிச் செல்லுதல், மாதாந்த கணக்குகளை நாளதுவரையாக்குதல் மற்றும் அக்ரஹார உரித்தினை செலுத்துவதனை துரித்தப்படுத்தல் நோக்கில் அக்ரஹார காப்புறுதி முறைமையின் கீழ் நிதியத்திற்கு கிடைக்கும் தவணைப் பணத்தினை மாதாந்தம் காலக்கழிவு பட்டியலின் பிரகாரம் உத்தியோகத்தரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கி மென்பிரதிகளின் மூலம் அல்லது இறுவட்டின் மூலம் நிதியத்திற்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு மாதிரிப்படிவமொன்று 2017 பெப்ரவரி 06 ஆந் திகதி நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 1744 நிறுவனங்களிடையே 257 நிறுவனங்கள் அதன் பிரகாரம் செயற்பட்டிராததுடன் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அக்ரஹார காப்புறுதிக்காக முறையான தரவு கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கு மற்றும் மேற்படி நோக்கங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு நிறுவனம் தவறியிருந்தது. |

(iii) காப்புறுதி கைத்தொழிலினை முறைமைப்படுத்தும் அதிகாரச்சட்டத்தின் 37(1) பிரிவின் (பின்னர் திருத்தப்பட்ட 16 ஆம் பிரிவு) பிரகாரம் ஒவ்வொரு காப்புறுதி பெறுநராலும் காப்பீட்டினை பெற்றுக்கொள்பவரின் நலன் போதியளவில் பாதுகாக்கப்படுகின்றதா என்பதனை பரிசோதிப்பதற்காக காப்புறுதி பெறுபவரால் வெளியிடப்படும் அனைத்து காப்பீடுகளினையும் மாதிரிகள் மற்றும் அந்த காப்பீட்டின் மாதிரிப் பத்திரங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மற்றும் எழுத்து மூலம் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்களின் பிரதிகள் இலங்கை காப்புறுதி கண்காணிப்பு ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், அந்த நிறுவனத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள தேசிய காப்புறுதி நிதியத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது அரச ஊழியர்களிற்காக ஆரம்பிக்கப்பட்ட அக்ரஹார ரன், ரிதி மற்றும் ஓய்வுபெற்றோருக்கான காப்புறுதி முறைமை மற்றும் பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்கான ரன் மற்றும் ரிதி காப்புறுதி முறைமைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதியத்தினால் 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அட்டைகள் உள்ளடங்கலாக ரூபா 25,743,020 செலவிடப்பட்டு அக்ரஹார காந்த அட்டைகளினை வாசிக்கும் 45 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 17 இயந்திரங்கள் மாத்திரம் மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டிருந்தது. மருத்துவமனைகளுக்கு இயந்திரங்களிடையே 7 இயந்திரங்கள் இணையக் கட்டமைப்புடன் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதில் சிரமம் நிலவுவதாக 2018 சனவரி மாதம் நிதியத்திற்கு மீள கையளிக்கப்பட்டதுடன் 22 இயந்திரங்கள் மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 5 இயந்திரங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் 7 இயந்திரங்களின் பௌதீக நிலைக்கும் தன்மை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. இதன் பிரகாரம் இயந்திரங்களை கொள்வனவு செய்யும் நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பது தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. எவ்வாறெனினும் தற்போது மிகவும்

வெற்றிகரமான அனைவருக்கும் இலகுவான கட்டமைப்பின் ஊடாக அங்கத்தவர்களை இனங்காணும் முறைமைக்கு மாறியுள்ளதாக அட்டைகளை வாசிக்கும் இயந்திரங்களை வழங்கியதன் விளைத்திறன் குறைவாக உள்ளதாகவும் நிதியத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மேற்படி செலவினம் விளைவற்ற செலவினமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v) நிதியத்தின் அக்ரஹார அட்டைகளை சமர்ப்பிக்கும் அங்கத்தவர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக 22 மருத்துவமனைகளுடன் நிதியம் உடன்படிக்கைகளினை கைச்சாத்திட்டிருந்ததுடன் அவற்றுள் 13 மருத்துவமனைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தது அவதானிக்கப்பட்ட போதிலும், புதிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும் ஓய்வுபெற்ற மற்றும் பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அக்ரஹார அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) உடன்படிக்கையின் பிரகாரம் அக்ரஹார அடையாள அட்டைகள் மூலம் அங்கத்தவர்களை இனங்காண்பதற்காக கட்டமைப்பு வசதிகளை வழங்குவதாக குறிப்பிட்டிருந்த போதிலும் செல்லுபடியான இரண்டு உடன்படிக்கைகளுக்கிடையே ஒரு மருத்துவமனைக்காக மாத்திரம் அந்த வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அக்ரஹார சாதாரண, ரன் மற்றும் ரிதி அட்டைகளை வழங்கிய போதிலும், அந்த அட்டைகளுக்காக தனியான புதிய கழிவுக் கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை அவதானிக்கப்படாததுடன் ரன் மற்றும் ரிதி காப்புறுதி அங்கத்தவர்கள் மருத்துவமனைகளுக்கு அறிமுகப்படுத்துவது மூலம் அங்கத்தர்வர்களுக்கு கிடைக்கும் நலன்களும் இதுவரையிலும் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ தொழிற்பாடு**

**(அ) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை ஆகிய பெயர்களை பயன்படுத்தல்**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை எனும் பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட போது நிதியம் தெரிவித்ததாவது 2016 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையினை தாபித்தல் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆகும் அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் திட்டவட்டமாக குறிப்பிடப்படும் நபரை உள்ளடக்கிய (இதன் பின்னர் சபை என இனங்காணப்படும்) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையொன்று நிறுவப்பட்டதுடன் அந்த பந்தியில் அறிமுகப்படுத்தப்படுவது நிறுவனம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அல்லது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை எனும் பெயரில் இனங்காணக்கூடியதாக இருந்த போதிலும், காப்புறுதி துறையில் நிறுவனம் பிரபல்யம் அடைந்துள்ளது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எனும் பெயரிலாகும்.

(ஆ) பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சாதாரண காப்புறுதி மோட்டார் அல்லாத பிரிவிலிருந்து பெறவேண்டிய தவணை வருமானம் ரூபா 178,870,895 இனால் அதிகரித்திருந்ததுடன் அந்த வருமானத்தினை அறவிடுவதற்கு முறையான நடமுறையொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. மேலும், அந்த அறவிடப்பட வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட 360 நாட்களுக்கு அதிகமான கடன்பட்டோர் கால எல்லையுடனான கடன்பட்டோருக்காக 2017 ஆம் ஆண்டின் போதும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதிலான தாமதங்கள் நிதியத்தின் நிதி உட்பாட்ச்சலினை மட்டுப்படுத்துவதற்கு காரணமாக அமைந்திருந்ததுடன் அந்த பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காது மீளவும் புதிய காப்புறுதி வழங்குவதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(ii) அதிகாரச்சட்டத்தின் 54 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் ஐஆர்ச்சீஎஸ்எஸ்/டீஜி/எல்ஈஜி/18/03/139 ஆம் இலக்க மற்றும் 2018 மார்ச் 27 ஆந் திகதிய கடிதத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிகள் தொடர்பான விசாரணையொன்றினை மேற்கொள்வதற்கான சுயாதீனமான கணக்காய்வாளரொருவர் நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு உரிய பணிகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2005 மே 18 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 12/2005 மூலம் அக்ரஹார காப்புறுதி முன்மொழிவு முறைக்காக நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான பதவிகளை வகிக்கும் அரசம ற்றும் உள்ளூராட்சி சேவையின் அனைத்து உத்தியோகத்தரும் அதற்கான தகுதியினை பெறுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2006 இல் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரமும் இந்த காப்புறுதி உத்தேச முறைமையின் பகுதியளவு அரச உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறுள்ள போது நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அரச நிறுவனங்கள் 30 க்கு

அக்ரஹார காப்புறுதி முறைமையின் கீழ் நலன்கள் பெறப்படுவதாக கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. மேலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பகுதியளவு அரச நிறுவனங்கள் 12 இலிருந்து பங்களிப்பு தொகையாக ரூபா 14,915,950 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் நலன்களாக ரூபா 7,183,772 செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ.்.எஸ்பீ.்.எஸ்டீஜீ.்.17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு “2030 நிகழ்ச்சி நிரல்” பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்கு உரியதாக நிதியத்தினால் தமது விடயப்பரப்பின் கீழமைந்த பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருக்காமையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடையக்கூடிய விதம், இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 நவம்பர் 04 ஆந் திகதிய தனியார் நிறுவனத்தினால் ரூபா 21,820,000 மொத்தக் கிரயமான காந்த அடிப்படையில் 650,000 மற்றும் காந்த அட்டைகளை வாசிக்கும் 20 இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக அதன் மொத்தப் பெறுமதியில் 20 சதவீதமான ரூபா 4,364,000 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர்10 ஆந் திகதி வரை 221,630எண்ணிக்கையான அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 மார்ச் 21 ஆந் திகதி 100,000 எண்ணிக்கையான அட்டைகளுக்காகவும் 2012 யூலை 24 ஆந் திகதி 150,000 எண்ணிக்கையான அட்டைகளுக்காகவும் முறையே ரூபா 2,440,000 தொகை மற்றும் ரூபா 3,585,000 தொகையினை செலுத்தியிருந்ததுடன் 28,370 எண்ணிக்கையான அட்டைகளுக்காக ரூபா 865,285 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட அந்த அட்டைகள் தற்போது செயற்பாடு நிலையில் இல்லாதிருந்ததுடன் அந்த நிறுவனமும் செயற்பாடு நிலையில் காணப்படவில்லை. அந்த கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை அறவிடுவதற்கும் அதற்கு உரியதாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்வினால் விசாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,923,020 தொகை செலவிடப்பட்டு 3,000,000 எண்ணிக்கையான இலத்திரனியல் அட்டைகள் 25 இலத்திரனியல் அட்டையை வாசிக்கும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பெறுகைக்கு உரிய வழங்குனரால் முன்வைக்கப்பட்ட கூறுவிலைகள் மற்றும் உரிய பெறுகை கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் காணாமல் போனமை அறியத்தரப்பட்டிருந்தது.

(iii) 2018 யூன் 07 ஆந் திகதி நிதியத்திற்கு கிடைத்திருந்த 10,000 எண்ணிக்கையான இலத்திரனியல் அட்டைகள் உரிய அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்குஇந்த அறிக்கைத் திகதி வரையிலும்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2016 பாதீட்டு முன்மொழிவின் மூலம் இயற்கை அனர்த்தங்களுக்காக முழு நாட்டையும் பாதுகாக்கும் நோக்கில் காப்புறுதி முறைமையொன்று உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தனிநபர் காப்புறுதி மேவுகையொன்று ரூபா 2.5 மில்லியனுக்கும் அனர்த்தங்களுக்கு உட்படும் ஒரு நபருக்காக கூடியது ரூபா ஒரு லட்சம் மேவுகையொன்று உரித்தாகும் வகையில் ரூபா 10,000 மில்லியன் மொத்த காப்புறுதி மேவுகையொன்றும் கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையில் திடீர் விபத்துகளுக்கு முகங்கொடுக்கும் கடற்தொழிலாளர்களுக்காக ரூபா 01 மில்லியன் அவசர விபத்து இறப்புக் காப்புறுதியொன்றையும் அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. முன்மொழிவு முறைமை செயற்படுத்தும் பொருட்டு பாதீட்டின் மூலம் காப்புறுதி தவணையாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியனும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 500 மில்லியனும் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நிதியம் இதற்காக மறு காப்புறுதியொன்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016/2017 ஆண்டுகளுக்காக மறுகாப்புறுதியின் மொத்த பெறுமதி ரூபா 420 மில்லியனாக இருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 மற்றும் அதற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் ரூபா 200 மில்லியனுக்கு கூடுதலான பெறுகைகள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் (சீஏபீ) பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இந்த பெறுகையின் ஆரம்பத்தில் அவ்வாறு பரிந்துரையினை பெற்றிருக்கவில்லை.

(ii) நிதியத்தினால் மறுகாப்புறுதி தொடர்பில் முறையான பெறுகைகள் நடைமுறையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் வழங்குனராக தெரிவு செய்து அதற்காக 2017 மே 30 ஆந் திகதி அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் மாத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் இந்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வரையிலும் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய மறுகாப்புறுதியாளரான தனியார் கம்பனியுடன் நிதியம் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது.

(iii) 2016/17 ஆண்டிற்குரிய மறு காப்புறுதி காலப்பகுதி 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை நிறைவடைந்திருந்ததுடன் அது மீண்டும் புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்குரிய பெறுகை நடவடிக்கைகளும் உரிய முறையில் மேற்கொண்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அந்த பெறுகைக்காக நிதியம் தயாரித்திருந்த காலச்சட்டகம் மற்றும் அரச நிதி திணைக்களத்தின் அறிவித்திருந்த பெறுகைகள் நடைமுறைக்குரிய உரிய காலச்சட்டகம் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தது. அவ்வாறே இந்த காலஅட்டவணை, 2016 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் திருத்தப்பட்ட 31 இல் குறிப்பிடப்பட்டிருந்த பெறுகை பணிகளுக்குரிய காலஅட்டவணை மற்றும் காலஅட்டவணையுடன் இணங்கவில்லை. எவ்வாறெனினும் அமைச்சரவையின் பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப குழு நியமிப்பதற்காக எடுக்கப்பட்ட காலம் மற்றும் அரச பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டி முறைமைப்படுத்துவதற்கு பெறுகைகள் நடைமுறையை நிறைவுசெய்வதற்கு எடுக்கும்காலம் காரணமாக இந்த மறு காப்புறுதியை புதுப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததாக நிதியத்தினால் பதில் வழங்கப்பட்டிருந்தது.

(v) மீண்டும் 2018/19 ஆண்டிற்காக மறுகாப்புறுதி 2018 மே 27 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்த வேண்டிய போதிலும், பழைய மறுகாப்புறுதி உடன்படிக்கை 2018 மே 27 ஆந் திகதி முதல் 2018 யூலை 31 ஆந் திகதி

வரை நிதியத்தினால் நீடிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 149,923,973 தொகையான மேலதிக பணம் மறுகாப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கைடன் கணக்காய்வுத் திகதியான ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருக்காமையினால் உரிய உடன்படிக்கைக்கு இருதரப்பினரும் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(vi) 2017 இன் 23 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிலினை முறைமைப்படுத்தும் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட இலக்கம் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில்களினை முறைமைப்படுத்தும் அதிகாரச்சட்டத்தின் 79 ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு நபர் அந்த நபர் சபையினால் அளிக்கப்பட்ட காப்புறுதியாளராக பதிவு செய்யும் சான்றிதழொன்றினை கொண்டிருப்பவராயின் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி வழங்குனர் சங்கமொன்றில் அங்கத்தவராயின் மாத்திரம் காப்புறுதி வழங்குனராக செயற்படுவதற்கு அல்லது அவ்வாறு முன்னிற்பதற்கு முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை காப்புறுதி கண்காணிப்பு ஆணைக்குழுவின் பதிவு செய்யப்படாத காப்புறுதியாளர் ஒருவர் ஊடாக நிதியத்தின் 3 பிரிவுகளின் 2017 மற்றும் 2018 ஆம்ஆண்டுகளில் மறு காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**6.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிதியத்தின் தலைமை அலவலகத்தில் கட்டிடங்களின் குத்தகை வாடகை உடன்படிக்கை 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி நிறைவடைந்திருந்ததுடன் பெறுகை நடைமுறையிலிருந்து விலகி மீள அந்த கட்டிடத்தின் குத்தகை வாடகை ரூபா 1,650,000 முதல் ரூபா 2,400,000 வரை அதிகரித்து வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. பின்னர் அதாவது 2017 திசெம்பர் 15 ஆந் திகதி நிதியம் உடன்படிக்கையினை கைச்சாத்திட்டிருந்த போதிலும் அந்த கட்டிட வாடகை மதிப்பீட்டினை விலைமதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பழைய உடன்படிக்கை இல்லாத சேவை கட்டணமொன்றை செலுத்துவதற்கும் அதற்குரிய தண்டப்பணத்தினை செலுத்துவதற்கும் நிதியம் இணங்கியிருந்தது.

**6.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016/17 ஆண்டுகளுக்கான மறுகாப்புறுதி உடன்படிக்கை 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி நிறைவடைந்திருந்த போதிலும், அத்திகதி முதல் அந்த உடன்படிக்கை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கான புதிய மறுகாப்புறுதி உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நிதியம் தவறியிருந்ததுடன் அதன் காரணமாக 2017 மே 25 ஆந் திகதி ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர் நிலைமைகளின் பாதுகாப்பிற்கு உள்ளான மக்களுக்காக நிவாரணம் வழங்கும் போது மறுகாப்புறுதி நிறுவனத்திடமிருந்து நிதியத்திற்கு உதவியினை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் அதற்குரிய நட்டஈடாக ரூபா 1,497,914,007 தொகையினை நிதியத்திற்கு செலுத்துவதற்கு நேர்ந்திருந்ததுடன் மறுகாப்புறுதி உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் எனினும் நிதியத்திற்கு கிடைக்கக் கூடியதாக இருந்த ரூபா --- தொகைநிதியத்திற்கு இழப்பாகியிருந்தது. அவ்வாறே 2017 நவம்பர் மாதம் ஏற்பட்ட இடர்களுக்கான நட்டஈடு செலுத்தும்போது பெறுமதி மறுகாப்புறுதியாளர்களினால் செலுத்தப்படாததுடன் ஆகக்குறைந்த எல்லை (Daductibal claim expenses) விஞ்சியிருந்தமையினால் அதற்காகவும் மறுகாப்புறுதி நிறுவனத்திடமிருந்து நட்டஈடு நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே நிதியத்தினால் மறுகாப்புறுதி உடன்படிக்கைக்கு புறம்பாக ரூபா 476,614,977 தொகையினை செலுத்த நேர்ந்திருந்ததுடன் மறுகாப்புறுதியாளர்களினால் அந்த

தொகை மீளளிப்புச் செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அந்த பெறுமதிக்கு நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளினுள் கிடைக்க வேண்டிய மறுகாப்புறுதி மீதிகளுக்காக பணத்தினை வழங்கும் போது அந்நிய செலாவணி மாற்றத்தின் அடிப்படையில் முறையே ரூபா 3,888,779 தொகை மற்றும் ரூபா 13,005,027 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**6.3 பதவியணியினர் நிருவாகம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 271 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 211 ஆகக் காணப்பட்டமையால் வெற்றிடங்கள் 60 ஆக இருந்தன. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட மட்டத்திலான 5 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதனுள் உதவி பொது முகாமையாளர் பதவியொன்று, முகாமைத்துவ பதிவிகள் 03 மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று உள்ளடங்கியிருந்தது. மேற்படி பதவிகளுக்காக 2018 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 பந்தியின் பிரகாரம் பதிற்கடமை நியமனம் வழங்கமுடியுமானது நிரந்தர நியமனமொன்றை மேற்கொள்ளும் வரையிலும் தற்காலிக மாற்றீடாக மாத்திரமாக இருக்க வேண்டிய போதிலும், நிரந்தர நியமனமொன்றினை மேற்கொள்ளாது 04 பதவிகளுக்காக நான்று மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக பதிற்கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத நாளாந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் 68 பேர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் பெறும் 29 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டினுள் இணைக்கப்பட்டிருந்தனர். எவ்வாறெனினும் அந்த ஆட்சேர்ப்புக்களுக்கு உரிய கோவைகள் பேணப்படாதிருந்ததுடன் பத்திரிகை அறிவித்தலொன்றை பிரசுரித்து உரிய முறையில் ஆட்சேர்ப்பு இடம்பெற்றமைக்கான சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினுள் ரூபா 454,844 செலவிடப்பட்டு பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு 5 பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதி வரையிலும் 5 பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) உதவி முகாமையாளர் முதலீடு மற்றும் அபாய பதவிக்கு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்வதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 396,405 கூட்டுத்தொகை செலவிடப்பட்டு பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும் தகுதிகளுடனான உத்தியோகத்தர் ஒருவர் முன்வராமையினால் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) நிதி மோசடி காரணமாக அநுராதபுரம் கிளையின் முகாமையாளர் 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி பணிநீக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய விசாரணை அறிக்கைக்காக ரூபா 47,280 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரையிலும் இறுதி விசாரணை அறிக்கையினை வெளியிடுவதற்கு அல்லது மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

### 7.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான இறுதி நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 07 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 7.2 உள்ளகக் கணக்காய்வு

2017 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டுச் செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 11 சதவீதம் முதல் 239 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### 7.4 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| 01. | நிதிக் கட்டுப்பாடு | (i) | தேவைப்பாட்டினை மதிப்பிடு செய்து முற்பணங்கள் வழங்கப்படாமை. |
| | | (ii) | முற்பண பதிவேடுகள் நாளதுவரையாக்கப் படாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | நிதியத்தின் நிதி கணக்குகள் வழிகாட்டியில் காணப்படும் வலியுறுத்தல்களின் பிரகாரம் பணவைப்பு பத்திரங்கள் மற்றும் உறுதிச்சீட்டுக்கள் அலுவலகம் / மேற்பார்வை பிரிவு (Branch Supervision) இற்கு சமர்ப்பிக்கப்படாமை. |
| | | (iv) | செலவினம் மேற்கொண்ட தரப்பினரால் உரிய காலப்பகுதியினுள் கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய உறுதிச்சீட்டுக்கள் ஏனைய சான்றுகள் கணக்கு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படாமை. |
| 02. | கடன் பட்டோர் கட்டுப்பாடு | | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வினை நாளதுவரையாக்கியிராமையால் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு மற்றும் பிரதான பேரேடு ஆகியவற்றுக்கிடையே ரூபா 75,037,720 ஆன வேறுபாடொன்று ஏற்பட்டிருந்தது. |
| 03. | கணக்கீடு | (i) | நிதிய கணக்கு பணிகளுக்காக பயன்படுத்தியவாறு காணப்படும் கணக்கீட்டு முறைமையில் குறைபாடுகள் காணப்படுகின்றமை. |
| | | (ii) | கடந்த வருடங்களில் கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் இடர்கடன் தவணை மற்றும்வட்டி உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து உரிய முறையில் அறவிடப்பட்ட போதிலும் பேரேட்டுக் கணக்குகள் நாளதுவைரையாக்கப்படாமை. |
| | | (iii) | நிதிக்கூற்றுக்களினுள் இரு பிரிவுகளின் தகவல்கள் உள்ளடங்குவதுடன் ஒரு பிரிவு கணனிமயப்படுத்தல் மற்றும் ஏனைய பிரிவு கைமுறை கணக்கு வைத்தல் முறையினை பின்பற்றியிருந்தது. |
| 03. | இயற்கை அனர்த்த காப்புறுதி | | இயற்கை அனர்த்தங்களுக்கான காப்புறுதிக்குரிய நட்டஈடு செலுத்துதல் முறைப்படி மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| 04. | முகாமைத்துவ தகவல் முறைமையின் குறைபாடுகள் | | நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இரண்டு பகுதிகளை கொண்டிருந்ததுடன் அவற்றுள் ஒரு பகுதியின் கணக்குகள் மற்றும் உரிய பதிவேடுகள் கணனிக் கட்டமைப்பினூடாக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மற்றைய பிரிவின் கீழான கணக்குகள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு கைமுறை (Manual) முறையில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. இதன் காரணமாக கணக்கு வைப்பதில் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. |